பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 08 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஃபிஜி, நியூசிலாந்து, தைமூர் நாடுகள் பயணத்தை முடித்துக்கொண்டு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று மாலை புதுதில்லி திரும்பினார்.

2. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதரத்தையும் உயர்த்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. மாலத்தீவு சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இந்தியா உதவியுடன் மேற்கொள்ளப்படும் இரண்டு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தார்.

4. தமிழகத்தில் சேலம், கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் 40 தங்கம், 27 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. அமெரிக்கா 2வது இடத்திலும், ஜப்பான் 3ஆம் இடத்திலும் உள்ளன.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பருவநிலை மாற்றங்களைத் தாங்கி அதிக விளைச்சல் தரக்கூடிய 109 புதிய பயிர் ரகங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வெளியிட்டார்.

புதுதில்லியில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் இந்தப் பயிர் ரகங்களை அவர் வெளியிட்டார்.

34 வயல் சாகுபடி பயிர்களும், 27 தோட்டக்கலை பயிர்களும் உள்ளிட்ட 61 பயிர் வகைகள் இதில் அடங்கும்.

சிறுதானியங்கள், எண்ணெய்வித்துக்கள், பருப்பு வகைகள், கரும்பு, பருத்தி உள்ளிட்ட பல்வேறு வகையான புதிய பயிர் ரகங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், பூக்கள் மற்றும் மருத்துவ தாவரங்கள் தோட்டக்கலைப்பயிர் ரகங்களில் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளிடையே கலந்துரையாடினார்.

புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள பயிர் ரகங்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்த பிரதமர், வேளாண் பொருட்களுக்கு மதிப்பு கூட்டுவதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெற்று வருமானத்தைப் பெருக்கலாம் என்று கூறினார்.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதரத்தையும் உயர்த்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இதில் பங்கேற்ற விவசாயிகள் புதிய பயிர் ரகங்கள் தங்களுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கும் என்று தெரிவித்தனர்.

சாகுபடி செலவு இதனால் குறையும் என்றும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் இந்தப் பயிர் ரகங்கள் அமையும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

ஊட்டச்சத்து மிக்க உணவைப் பெற சிறுதானிய வகைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர், இயற்கை வேளாண்மையின் பயன்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

தற்போது அதிக அளவில் விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் மிகுந்த நம்பிக்கையுடன் சாகுபடி செய்ய முன்வந்திருப்பதை பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு இல்லாத இயற்கை வேளாண் பொருட்கள் மீது மிகுந்த நாட்டம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை வரவேற்பதாக இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் தெரிவித்தனர்.

வேளாண் அறிவியல் மையங்கள் மூலம் விவசாயத்திற்கு தேவையான தகவல்களையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருவதற்கும் அவர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

ஒவ்வொரு மாதமும் புதிய பயிர் ரகங்கள் கொண்டுவரப்படும் முயற்சி தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட தரமான பயிர் ரகங்களை உருவாக்கி தந்துள்ள வேளாண் விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவிப்பதாக பிரதமர் கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

பிரதமரின் வழிகாட்டுதலின்படி புதிய உத்வேகத்துடன் தாங்கள் கடமையாற்றி வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ்சிங் சௌஹான், குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்டும் அமோக விளைச்சல் தரும் ரகங்கள், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் என்று கூறினார்.

பருவநிலை மாற்றங்களை தாங்கி வளரும் பயிர் வகைகள் அதிக அளவு ஊட்டச்சத்து நிறைந்தவையாகவும் உள்ளன என்று திரு. சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் **Kokernag** என்ற இடத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வீரவணக்கம் செலுத்தியுள்ளார். நாட்டுக்காக தங்களது இன்னுயிரை ஈந்த வீரர்களின் குடும்பத்தினரோடு அவர்களின் இழப்பையும், துயரத்தையும் பகிர்ந்துகொள்வதாக குறிப்பிட்டுள்ளார். வீரர்களின் குடும்பதினருக்கு அரசும், நாட்டு மக்களும் எப்போதும் துணைநிற்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியப் பெருங்கடல் நாடுகள் மண்டலத்தில், மாலத்தீவுகள், இந்தியாவின் முக்கிய நட்பு நாடாக உள்ளது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக மாலத்தீவு சென்றுள்ள திரு. ஜெய்சங்கர், இந்திய அரசின் உதவியுடன் **Addu** சீரமைப்பு மற்றும் கடற்கரை பாதுகாப்பு திட்டங்களை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியப் பெருங்கடல் பகுதியின் முக்கிய பொருளாதார வர்த்தக மையமாக **Addu** பகுதியை மேம்படுத்துவதற்கு இந்த இரு திட்டங்களும் உதவிடும் என்று தெரிவித்தார்.

80 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் **Addu** பகுதியில் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமின்றி சுற்றுலாவையும் மேம்படுத்தும் என்று தெரிவித்தார்.

ஒட்டுமொத்தமாக மாலத்தீவின் வளர்ச்சிக்கு இந்த இரு வளர்ச்சித் திட்டங்களும் முக்கிய பங்களிப்பை செலுத்தும் என்றும் அவர் கூறினார்.

புதிய வேலைவாய்ப்புகள், புதிய சுயதொழில்கள், வர்த்தகம் ஆகியவை விரிவாக்கம் செய்யப்படுவதற்கு வழி பிறந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் இந்தியா **Addu**-வில் 220 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்திருப்பதாக தெரிவித்த திரு. ஜெய்சங்கர், மாலத்தீவின் வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டத்தில் 44 இடங்களில் 112 கோடி ரூபாய் மதிப்பில் மருத்துவத்துறை சார்ந்த கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

வேலம்பாளையத்தில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனையில் உயர்தர சிகிச்சை அளிப்பதற்கான கட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதாகவும், விரைவில் இது பயன்பாட்டுக்கு வரும் என்றும் தெரிவித்தார்.

முன்னதாக ஈரோடு அரசு பல்நோக்கு மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டணப் படுக்கை அறைகளை அவர் திறந்து வைத்தார்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த 3 ஆண்டுகளில் 2 மடங்கு உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஈரோடு, கன்னியாகுமரி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் சாயப்பட்டறைகள், தோல்பதனிடும் தொழிற்சாலைகள் போன்றவற்றால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகத் தெரிவித்தார். இதனைத் தடுக்கும் நோக்கில் அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோய் பரிசோதனை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

'அன்னையின் பெயரில் மரம் நடுவோம்' என்ற பிரதமரின் அழைப்பை ஏற்று அனைவரும் இந்த இயக்கத்தில் பங்கு பெற்று வலுப்பெற செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் தாமரைக்குளத்தில் தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து மரம் நடும் இயக்கத்தில் அவர் கலந்துகொண்டார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்திலும் மக்கள் பங்குபெற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

**Har Ghar Tiranga** இணையதளத்தில் தேசியக்கொடியுடன் செல்ஃபி எடுத்து மக்கள் பதிவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

முதுநிலை மருத்துவ பட்டப் படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு இன்று நாடு முழுவதும் நடைபெற்றது.

தேசிய தேர்வு முகமை நடத்திய இந்தத் தேர்வில் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கடந்த ஜூன் மாதம் நடைபெறுவதாக இருந்த இந்தத் தேர்வு குறிப்பிட்ட சில காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<>>>>

மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மேற்கொண்டுள்ள திட்டங்களை மாநிலங்கள் திறம்பட செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணாதேவி வலியுறுத்தியுள்ளார்.

மாநில சமூக பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் ஆளுநர்களிடையே காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர், குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கென மத்திய அரசு கொண்டு வந்துள்ள ஒருங்கிணைந்த முன்னோடித் திட்டங்களை மாநிலங்கள் முழு அளவில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>

சேலம், கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் கன முதல், மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட 17 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 3 நாடுகள் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று மாலை புதுதில்லி திரும்பினார்.

ஃபிஜி, நியூசிலாந்து, தைமூர் நாடுகளுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட குடியரசுத்தலைவர், அந்நாட்டுத் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகி உள்ளன.

இந்த மூன்று நாடுகளில் வசிக்கும் இந்திய வம்சவளியினரையும் குடியரசுத்தலைவர் சந்தித்துப் பேசினார்.

நியூசிலாந்து நாட்டுடன் வர்த்தக ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

சர்வதேச சோலார் கூட்டமைப்புக்கு அந்நாடு ஒப்புதல் அளித்துள்ளது.

கிழக்கு தைமூர் நாட்டின் ஒலிபரப்புக் கழகத்திற்கும் - பிரசார் பாரதிக்கும் இடையே நிகழ்ச்சிகளை பகிர்ந்துகொள்வதற்கும், ஒலிபரப்பு தொடர்பான அதிகாரிகளுக்கான பாஸ்போர்ட், விசா தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்தாகியுள்ளது.

ஃபிஜி பயணத்தின்போது இந்தியாவின் உதவியுடன் அமைய உள்ள 100 படுக்கைகளுடன் கூடிய உயர் சிகிச்சை மருத்துவமனைக்கான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது.

இந்திய நேரப்படி நள்ளிரவு 12.30 மணியளவில் நடைபெறவுள்ள இந்த நிறைவு நிகழ்ச்சியின் போது நடைபெறும் வீரர்கள் அணிவகுப்பில், இந்தியாவின் தேசியக்கொடியை மனுபாக்கரும், **Sreejesh**-ம் ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடல் - பாடல் என பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் இந்த நிறைவு நிகழ்ச்சி 2 முதல் 3 மணி நேரம் வரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒலிம்பிக் போட்டியில் 40 தங்கம், 27 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 91 பதக்கங்களுடன் சீனா முதலிடத்திலும், 38 தங்கம் உட்பட 125 பதக்கங்களுடன் அமெரிக்கா 2வது இடத்திலும், 20 தங்கம், 12 வெள்ளி உட்பட 45 பதக்கங்களுடன் ஜப்பான் 3வது இடத்திலும் உள்ளன.

**<<<<The End>>>>**